தமிழ்ச் சிட்டு

A:106

வாழ்வுக்கு நோக்கம் தேவை!

'நோக்கம்'எனஒன்(று) இல்லாது போனால்,
வாழ்க்கை நொய்ந்தே போகும்!—நம்
உள்ளம் நொடிந்தே சாகும்!
ஊக்கம் குறையும்: உழைப்பும் சலிக்கும்;
உலகில் எதுவும் புளிக்கும்!—நம்
உறவுகள் பார்த்தே இளிக்கும்!

ஆக்கம் குறையும்; அறிவும் மயங்கும்;
அல்லல் படையொடு ஊன்றும்!—பிறர்
அன்பும் கசப்பாய்த் தோன்றும்!
தாக்கம் வந்தே உடலை வருத்தும்!
தவிப்பும் நெஞ்சினை இறுக்கும்—நமைத்
தற்கொலை செய்திடச் சறுக்கும்!

பணத்தை ஈட்டுதல் நோக்கம் ஆகாது;
பதுக்கவும் பெருக்கவும் தூண்டும்!—பல
பயன்களுக் கதில்வழி வேண்டும்!
குணத்தால் சிறப்பதும் வாழ்வில் போதாது;
குடிநலம் பெறல்அதில் இல்லை;—பல
கொடுமைகள் எதிர்வரின் தொல்லை!

பொதுநல உணர்வே உயர்வான நோக்கம்;
புதுப்புது விளைவுக்கும் ஊக்கம்!—கொடும்
போரிலா உலகுக்கும் ஆக்கம்!
எதுஉயர்(வு) எதுஇழி(வு) என்றெண்ணிச் செய்க!
இனிவரும் மக்கட்குப் புதுமை!—மக்கள்
எல்லார்க்கும் எல்லாமே பொதுமை!

-1994

குரல் : 22
இசை : 9

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை :
உருபா: 1-50

பொதுத் தொண்டர்க்குச் சில பொன்னுரைகள்.

O நீங்கள் தொண்டாற்றச் செல்கையில் பொன்னையோ, வெள்ளியையோ செம்பையோ உங்கட்காகத் தேடி வைத்தல் வேண்டா; வழிச் செலவுக்காகப் பையினையோ, மாற்றுடையையோ, செருப்புகளையோ, கைத்தடியையோ எடுத்துச் செல்லல் வேண்டா; உங்கட்கு வேண்டியவை தாமே வந்து வாய்க்கும்;

O நாடெங்கும் சென்று உண்மையைக் கூறுங்கள். ஒளியுலகச் செய்தியை எடுத்தியம்புங்கள்; ஏற்றுக் கொள்பவர் ஏற்றுக் கொள்ளட்டும்; ஏற்றுக் கொள்ளாதவரை உதறித் தள்ளுங்கள்; உலகியல் மாந்தர் நடுவில் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களைப் பிடித்துத் தங்கள் வழக்கு மன்றங்களில் குற்றஞ் சாட்டிக் கோவில்களில் உங்களைக் குதிரை வாரினால் அடிக்க வைக்கக்கூடும்; அப்பொழுதும் கவலைப்படல் வேண்டா. உண்மை ஒளி உங்கள் உள்ளத்தில் இருக்கும்பொழுது, ஆணையாளர்களாகட்டும் அரசர்களாகட்டும் அவர்கள் முன்பும் உங்கள் தலை நிமிர்ந்து நிற்கும்;

O உடன்பிறந்தார்க்குள்ளே பகை மூளக்கூடும், பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் பூசல் நிகழக்கூடும்; உங்கள் செயலை முன்னிட்டு, நீங்கள் பகைக்கப் படுவீர்கள்; எனினும் இறுதிவரை உறுதி மாறாதிருப்பவனே உய்தியடைவான் என்று உங்கட்குச் சொல்கின்றேன். நீங்கள் யாருக்கும் அஞ்சுதல் வேண்டா, உள்ளத்தைக் கொல்ல வல்லவராயிராமல் உங்கள் உடலை மட்டும் கொல்ல வல்லவர்கட்கு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. உங்கள் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே அழிக்கவல்ல தீவினைகட்கே நீங்கள் அஞ்சுங்கள்;

O நான் உலகில் அமைதியை நிலைநாட்ட வந்தேன் என்று எண்ணாதீர்கள். அமைதியையன்று; போராட்டத்தையே எழுப்ப வந்துள்ளேன். ஆம், மகனுக்கும் தந்தைக்கும், மகளுக்கும் தாய்க்கும், மாமிக்கும் மருமகளுக்கும் பிரிவினையை உண்டாக்க வந்தேன்; ஒரு மாந்தனுக்குப் பகைவர் அவன் வீட்டாரே, தந்தையையாவது தாயையாவது தொண்டு வாழ்க்கையினும் மிகுதியாகப் பாராட்டுகின்றவன் எனக்குரியவன் அல்லன்; மகனையாவது மகளையாவது என்னினுஞ் சிறப்பாகக் கருதுபவன் எனக்கு உரியவன் அல்லன். எவனொருவன் பொதுப்பணிக்காக வீட்டையாவது உடன்பிறந்தாரையாவது பெற்றோரையாவது, மனைவி மக்களையாவது நிலங்களையாவது விட்டுவிட்டு வருகின்றானோ அவனே நிலைபெற்ற மெய் வாழ்க்கைக்கு உரியவனாவான்;

O தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புபவன் அதனை இழந்து போவான்; தொண்டில் தன்னையே அழித்துக் கொள்பவன் தன் உயிரைக் காத்துக் கொள்வான்; மாந்தன் உலகம் முழுவதையும் தனக்குத் தேடி வைத்துக்கொண்டாலும் தன் புலம்பனை (உயிரை) இழந்து போவானாயின் அவனுக்குப் பயன் என்ன? தன் புலம்பனுக்கீடாக மாந்தன் எதைக் கொடுக்க முடியும்? உண்மையில் முழு நம்பிக்கை வேண்டும், கடுகளவு நம்பிக்கை இருப்பினும் போதும், மலையையும் புரட்டித் தள்ளலாம்;

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச் சிட்டு

குரல்- 22] (தி.பி. 2025) மேழம் (மார்ச்-ஏப் 94) [இசை-9

உலக நிலைகளைத் தெரிந்து கொள்ளுங்கள் :

அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்புக் கழகம்!

(Amnesty International)
(1. Eastern street, London-WCIX8DJ. U.K.)

உலக அரசுகளின் உரிமை மீறல்கள்:

உலகெங்கிலும் உள்ள பல்வேறு ஆட்சி நாடுகளில் நாள்தோறும் பல இலக்கக்கணக்கான ஏன் கோடிக்கணக்கான மக்கள், தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், நிறம், பால், இனம், மொழி மற்றும் மதம் ஆகியவற்றின் காரணமாகச் சிறையிலடைக்கப்படுகின்றனர். இவர்களில் பற்பலர் எவ்வகைக் குற்றச்சாட்டோ, உசாவலோ இன்றிச் சிறையில் அடைக்கப்படுகின்றனர்; உறுப்புச் சிதைவு மற்றும் உயிர்நீக்கத் தண்டனை எங்குமே பரவியுள்ளன. பல நாடுகளில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அரசின் தடுப்புக் காவல் பாடி (முகாம்)களுக்கும், சிறைச் சாலைகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டபின், 'மாயமாய்' மறைந்துள்ளனர். இன்னும் சிலர் எந்தச் சட்டவரையறையும் இன்றிப் பொறுக்கியெடுக்கப்பட்டு, அரசினராலோ அவர்களின் கையாட்களினாலோ கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் உரிமைப் பாதுகாப்பு என்பதன் விளக்கம்:

இவ் விக்கட்டான நிலைகளில்தான் இம் மனச்சான்றுச் சிறையாளிகளின் விடுதலைக்காகப் பாடுபட முன்வரும் இயக்கம் தன்னுரிமையுள்ள, உலகம் தழுவிய அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்புக் கழகம்' (Amnesty International) என்னும் உலக அமைப்பாகும். அவ் வமைப்பு அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்பில் ஒரு முதாமைப் பங்காற்றுகிறது. அதன் செயல்கள் சிறையிலிடப்பட்டவர்கள் மீது ஒருமுகப்படுத்தப் படுகின்றன.

O இது, தங்கள் நம்பிக்கைகள், நிறம், பால், இனம், மொழி, மற்றும் மதம் ஆகியவற்றுக்காகக் காவலில் வைக்கப் பெற்றுள்ளவர்களே மனச்சான்றுக் குற்றவாளிகள் எனப் பெறுவோர். இவர்கள் வன்முறையில் ஈடுபடுவதோ அதைக் கற்பிப்பதோ கிடையாது.

O இ'து, அனைத்து அரசியல் குற்றவாளிகளுக்கும் நேர்மையான காலத்தாழ்வற்ற உசாவல்(விசாரணை) கிடைக்கச் செயற்படுகிறது.

O இ'து, உயிரெடுப்புத்(மரண) தண்டனையை முற்றிலும் எதிர்க்கிறது. மேலும் சிறையாளிகள் உறுப்புச் சிதைவு (சித்திரவதை)செய்யப்படுவது, கொடுமையாக, கீழ்த்தரமாக மாந்தவிரக்கமற்ற முறையில் நடத்தப்படுவது மற்றும் தண்டிக்கப்படுவது ஆகியவற்றையும் எவ்வகைப் பாகுபாடும் இன்றி எதிர்க்கிறது.

இதன் நோக்கம்: 1. அனைத்து மனச்சான்றுச் சிறையாளிகளையும் உடனடியாக, கட்டுப்பாடின்றி விடுவிக்க முயல்வது.

2. அரசியல் சிறையாளிகளுக்கு நேர்மையான காலத்தாழ்வற்ற உசாவல் கிடைக்கச் செய்வது.

3. உறுப்புச் சிதைவு மற்றும் உயிரெடுப்புத்(மரண) தண்டனையை முற்றிலுமாக ஒழிப்பது.

இதன் செயற்பாடுகள்:

1. தனது குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அரசாட்சிகளே அவற்றை மீறுகின்றன. அவ்வாறு மாந்த உரிமைகள் மீறப்படும்போது, மக்கள் கடுமையாகத் தாக்குறுகின்றனர். அவ்வாறு தாக்குறுபவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் பல உதவிகள் தேவைப்படுகின்றன.

2. இவ் வியக்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மூலம், அரசாட்சிகளின் மக்கள் உரிமை மீறல்களால் தாக்குண்ட குற்றமற்ற சிறையாளிகளின் வழக்குகளை இக் கழகம் எடுத்துக்கொள்கிறது. அதை மக்கள் நடுவில் விளம்பரப்படுத்துகிறது. சிறையிடப்பட்டவர்களை அனைத்துலகத் தரத்தின்படி நடத்துவிக்க முயற்சி மேற்கொள்கிறது.

3. வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இவ்வியக்க நடவடிக்கைகளில் யாரும் இணையலாம். இதன் செய்தி மடலுக்கு உறுப்பினர்கள் ஆகலாம். அவ்வவ் வூர்களில் உள்ள இக் குழுவில் சேர்ந்து கொள்ளலாம். அக் குழுவிற்கு நன்கொடைகள் அனுப்புவதுடன் அதன் உலகம் தழுவிய வேண்டுகோளுக்கு ஆதரவும் அளிக்கலாம்.

இதன் தோற்றம்:

'அம்னஸ்டி இண்டர்நேஷனல்' என்னும் அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்புக் கழகம் எவ்வாறு தோன்றியது?

1961-ஆம் ஆண்டு, பிரித்தானிய வழக்குரைஞர் பீட்டர் பெனன்சன் என்பவர், 'இலண்டன் அப்சர்வர்' என்னும் நாளிதழில் எழுதிய ஒரு கட்டுரையுடன் இக் கழகம் தொடங்கியது. அவர் எல்லா மக்களையும் எவ்வகைச் சார்புமின்றி, அமைதியாக, 'மனச்சான்றுச் சிறையாளி'களின் விடுதலைக்காகச்

செயலாற்றும்படி வற்புறுத்தினர். ஒரே மாதத்திற்குள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள்—ஏறத்தாழ ஆயிரம்பேர் அத்தகைய சிறையாளிகளுக்கு நடைமுறை உதவிகளை அளிக்க முன்வந்தனர். வழக்குகள் குறித்துப் புலனங்கள் (தகவல்கள்) திரட்ட, அவற்றை வெளியிட, அரசாட்சிகளை அணுக, தேவையான உதவிகள் செய்ய அவர்கள் அணியமாக இருந்தனர். ஒரு சிறு அளவில் கருத்துப் பரப்புதல் முயற்சியாகத் தொடங்கிய 'மக்கள் உரிமைப் பாதுகாப்புக் கழகம்' இன்று ஓர் அனைத்துலக இயக்கமாக வளர்ந்துள்ளது.

இதன் தன்மையும் சிறப்பியல்களும்:

'இவ்வுரிமைப் பாதுகாப்புக் கழகம்' (அம்னஸ்டி இண்டர் நேஷனல்) அரசியல் சார்பற்ற ஓர் அமைப்பு. இஃது, எந்த நாட்டு அரசாட்சியையும் அரசியல் அமைப்பையும் ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ கிடையாது. அத்துடன் அஃது எந்தக் குற்றவாளிகளின் உரிமைகளைக் காக்க போராடுகிறதோ அவர்களின் கொள்கைகளை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ இல்லை. அஃது அரசாட்சியின் கொள்கைகள் அல்லது அவற்றால் தாக்கமடைந்தவர்களின் நம்பிக்கை பற்றிப் பொருட்படுத்தாது. அஃது எந்தக் காரணத்திற்கோ சிறைப்படுத்தப்பட்டவர்களுக்காக, எடுத்துக் கொள்ளப்பெற்ற வழக்குகளில் உள்ள மாந்த உரிமைப் பாதுகாப்பு குறித்து மட்டுமே அக்கறை கொள்கிறது.

இது செய்திகளை எவ்வாறு திரட்டுகிறது? இயங்குகிறது?

இவ்வுரிமைப் பாதுகாப்புக் கழகம் குற்றவாளிகள் தொடர்பான உண்மைகளை வெறுப்பு விருப்பு இல்லாமலும், துல்லியமாகவும் தெரிவிப்பதற்கு அதிக முகாமை (முக்கியத்துவம்) கொடுக்கிறது. அதனுடைய செயல்பாடுகள் மாந்த உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை ஆழ்ந்த கவனத்துடன் ஆய்வு செய்வதைச் சார்ந்திருக்கின்றன. இஃது, இலண்டனைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு, I, Eastern Street London WCIx8DJ, United Kingdom என்னும் முகவரியிலிருந்து, செயல்படுகிறது. இலண்டனில் உள்ள இதன் தலைமைச் செயலகத்தில் 40 நாடுகளைச் சேர்ந்த 250 பேர் பணியாற்றுகின்றனர்.

இவ் வலுவலகத்தில் உள்ள ஆய்வாளர்கள் பல்வேறு வழிகளில் செய்திகளைத் திரட்டி, அவற்றை ஆய்வு செய்கின்றனர். அவ்வாறு ஆய்வு செய்யப்படுபவற்றில், நூற்றுக்கணக்கான செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள், அரசு அறிக்கைகள், வானொலி, ஒளி—பரப்புகள், வழக்குரைஞர்கள் மற்றும் மாந்தநேய அமைப்புகளின் அறிக்கைகள். சிறையில் அடைக்கப்பட்டவர்கள், மற்றும் அவர்களின் உறவினர்கள் ஆகியோரின் கடிதங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இத்துடன், இவ்வலுவலகம் உண்மையைக் கண்டறியும் குழுக்களை நேரடியாக ஆராய்வதற்கும், உசாவலில் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கும், சிறையாளிகளைச் சந்திப்பதற்கும்,

அரசு அதிகாரிகளுடன் நேர்முக உரையாடல் நிகழ்த்தவும் உறுப்பினர்களை அனுப்புகிறது. மேலும் இவ் வியக்கம் அது வெளியிடும் அறிக்கைகள் குறித்து முழுப்பொறுப்பு ஏற்பதுடன், அதில் எந்த நிலையிலும் தவறு இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், திருத்தம் வெளியிடவும் அணியமாக உள்ளது.

இவ்வியக்கம் பணத்திற்கு என்ன செய்கிறது?

இவ் வியக்கம் தன் பொருள் நிலைகளைப் பொறுத்தவகையில், அதன் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் நன்கொடைகளைச் சார்ந்தே உள்ளது. அதனுடைய பணிகளுக்கு அரசியல் தன்னுரிமை போலவே, பொருளியல் சார்பின்மையும் இன்றியமையாததாகும். மேலும், அது நன்கொடைகளை ஏற்றுக் கொள்வது குறித்துக் கடுமையான நெறிமுறைகளை வகுத்துள்ளது. இவ் வியக்கத்தால் பெறப்படும் பொருளுதவி அதன் நடுநிலைமையைப் பிறழச் செய்யாமலும், பொருட்கொடை செய்பவர்களைச் சார்ந்து நிற்காமலும், அதன் செயல்பாட்டுத் தன்னுரிமையைத் தடுக்காமலும் இருக்கின்றதா என்பது உறுதி செய்துகொள்ளப்படுகிறது. பெரும்பாலும் பொதுவான பொருள் நிலை, தனிப்பட்டவர்களின் சிறிய, பெரிய நன்கொடைகள், உறுப்பினர் கட்டணங்கள் மற்றும் பொருள் திரட்டும் முயற்சிகளில் இருந்தே கிடைக்கிறது. தன்னுடைய பொருள் தேவைக்காக இவ்வியக்கம் எந்த ஓர் அரசின் பணத்தையும் ஒருபோதும் நாடுவதோ பெறுவதோ கிடையாது.

இதன் பணிப் பரப்பு:

எப்பொழுதெல்லாம் அரசியல் சிறைப்படுத்தங்கள், சிறையாளிகளுக்குச் செய்யப்படும் கொடுமைகள், அல்லது சாவுத் தண்டனைகள் குறித்து இவ் வியக்கம் கேள்விப்படுகிறதோ, உடனே அவை குறித்து உண்மையான செய்திகளை அறிவதில் தீவிர கவனம் செலுத்துகிறது. இலண்டனில் உள்ள இதன் தலைமைச் செயலகத்தில் உள்ள ஆய்வாளர்கள் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு விளக்கத்தையும் திரட்டி, ஆராய்ந்து, சிறையில் இடப்பட்டவர்களின் கோப்புகளை உருவாக்குவதுடன், அவர்கள் காவலில் வைக்கப்பட்டதற்கான காரணத்தையும் அறிகிறார்கள். சிறையிலிடப்பட்டவர்களுக்கான முயற்சிகள் உடனே தொடங்குகின்றன.

தாக்கப்பட்டவர்கள் 'மனச்சான்றுச் சிறையாளி'கள் என்பது தெளிவானவுடன், ஒவ்வொரு வழக்கும் தனிப்பட்ட முறையில் உலகின் பல இடங்களில் இயங்கி வரும் ஒன்று அதற்கு மேற்பட்ட 'அம்னஸ்டி' குழுக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

உள்ளூர் 'அம்னஸ்டி' உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுக்கள். அவ் வழக்கின் பின்னணியை ஆராய்வதுடன், தொடர்புடைய அதிகாரிகளுக்கு அச் சிறையாளிகளைக் கட்டுப்பாடற்றும், உடனடியாகவும் விடுதலை செய்யக் கோரி மடல்கள் எழுதத் தொடங்குகின்றன.

இப் பணி பல மாதங்கள் தொடர்கிறது. சில சமயங்களில் பல ஆண்டுகளுக்கும் இது நீடிக்கிறது. கடிதங்களுக்கு மேல் கடிதம் அந்நாட்டுத் தலைமை அமைச்சர்க்கும், குடியரசு நாடானால் குடியரசுத் தலைவர்க்கும். பிற ஆட்சி நாடானால் ஆட்சித் தலைவர்க்கும், அமைச்சர்களுக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்-கும் அனுப்பப்படுகின்றன. உறுப்பினர்கள் தாங்கள் கவனத்தில் கொள்ளப் பெற்ற சிறையாளிகள் குறித்து உள்ளூர் செய்தித் தாள்களில் செய்திகள் வெளியிட முயல்கின்றனர். அவர்கள் தங்கள் நாட்டிலுள்ள சிறையாளிக்குச் சொந்தமான அந்த வெளிநாட்டுத் தூதரகத்தையோ அல்லது அந்நாட்டு வாணிகப் படிநிகராளிகளின் குழுவையோ தொடர்பு கொள்கின்றனர். சிறையாளிகளின் விடுதலையைக் கோரும் வேண்டுகோள்களில் பெருமக்கள் பலரிடம் கையொப்பம் பெற்று அனுப்புகின்றனர். சிறையாளிகளின் குடும்பத்துடன் தொடர்கொள்ள முடிந்தால், அவர்களுக்குத் தேவையான துயர்தவிப்பு உதவிகளை அனுப்ப முயற்சி செய்கின்றனர். அச் சிறையாளியுடன் மடல் தொடர்பும் கொள்ளத் தொடங்குகின்றனர்.

தொடர்ச்சியாய் அரசியல் சிறைப்படுத்தங்கள் நிகழும் பொழுது, சில வேளைகளில் தாக்கமடைந்த ஒவ்வொருவரையும் தனித் தனியாக அடையாளம் காணுவது இயலாததாகும். இருப்பினும், அரசியல் முறையான காரணங்களால் மக்கள் தளைப்படுத்தப்பட்டாலும், நேர்மையான, உடனடியான உசாவலைக் கோர அச் சிறையாளிகளுக்கு இருக்கும் உரிமையை மதிக்கும்படி அவ்வமைப்பு அந்த அரசாட்சியை வலியுறுத்துகிறது.

பொதுவாக, சிறையாளிகளின் மீது பயன்படுத்தப்படும் உறுப்புச் சிதைவுகள் கொடுமைகளை நிறுத்தக் கோரியும், உயிரெடுப்புத் தண்டனையை, சட்டத்தில் இருந்தும், நடைமுறையில் இருந்தும் முற்றிலுமாக ஒழிக்கக் கோரியும், இவ்வியக்கம் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சிறையாளிகள் உறுப்புச் சிதைவுக் கொட்டடிகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னும், சாவுத் தண்டனை கொடுக்கப்பட்ட பின்னும் கூட, இவ்வியக்கம் தன் முயற்சியைக் கைவிடாமல் அவர்களுக்காகத் தொடர்ந்து போராடுகிறது. இத்தகைய நேரங்களில் வழக்கின் முடுக்கத்தைத் கருதி, பல நாடுகளில் உள்ள ஆதரவாளர்கள் இது குறித்து உடனடியாக அறிவுறுத்தப்பட்டு ஒரு சில மணித்-துளிகளுக்குள் நூற்றுக்கணக்கான தொலைவரிகள், தொலைச் செய்திகள் மற்றும் பிற உடனடி வேண்டுகோள்கள் அவ்வரசுக்கோ, சிறைச்சாலைகளுக்கோ அல்லது தடுப்புக் காவல் பாடிகளுக்கோ அனுப்பப்படுகின்றன.

இவ்வாறான மடல்கள், தொலைவரிகள், மற்றும் சிப்பங்கள் வெளியே இருந்து சிறைக்குள் சென்றடைகின்றன, பல விடைக் கடிதங்கள் சிறைச்சாலைகளிலிருந்து கடத்தப்பட்டும், வானூர்தி நிலையத் தணிக்கையாளர்களை மீறியும் வந்து சேர்கின்றன,

இவ்வகை முயற்சிகளால், சிறையாளிகளில் சிலர் 'அம்னஸ்டி' இயக்கம் தலையிட்டவுடனேயே விடுவிக்கப்படுகின்றனர்; சிலர் பொது மன்னிப்பின் மூலம் விடுவிக்கப் பெறுகின்றனர்; மற்றவர்கள் விடுதலை பெறுவதற்கு முன் தங்கள் தண்டனைக் காலம் முழுவதையும் கழித்துவிடுகின்றனர். ஆனால் எந்த ஒரு சிறையாளியின் விடுதலைக்காக அதன் பணியில் ஈடுபட்டபின், அதன் முயற்சியினை ஒருபோதும் கைவிடுவதில்லை.

மொத்தத்தில், இந்த இயக்கம் ஓர் உயிரோட்டமாக, நம்பிக்கையான ஓர் உடன்பாடாக இருப்பதுடன், மாந்த மேன்மை காக்க செயல்பட அணியமாகவுள்ள ஒவ்வொருவரையும் வரவேற்கிறது. பொதுவான மக்கள் தங்கள் அரசியல் வேற்றுமை குறித்த கவலையின்றி, அடக்குமுறையின் மீறல்களைத் தடுப்பதற்கான முயற்சியில் இணைந்து செயல்பட முடியும் என்பதை இந்த இயக்கம் மெய்ப்பித்துள்ளது.

சிறையாளிகளுக்கு எவ்வகைய உதவிகள் இவ்வியக்கத்தால் கிடைக்கின்றன :

இவ்வியக்கம் எந்தச் சிறையாளிகளின் விடுதலைக்காகப் பாடுபடுகிறதோ, அவர்களுக்கு உண்மையாக உதவ முயல்கிறது. அவர்களின் நிலை குறித்து அனைத்துலக அளவில் செய்திகள் வெளியிடும் அளவிற்கு, அவர்களின் விடுதலையைக் கோரித் தொடர்ச்சியாகக் கடிதங்கள் மற்றும் வேண்டுகோள்கள் அனுப்புவதும் முகாமையானதாகும். இதன் தூதுக் குழுக்கள் அடிக்கடி சிறையாளிகளை நேரடியாகப்பார்வை காண்பதுடன்,கொடுமைப் படுத்தப்பட்ட சிறை ாளிகளை ஆய்வு செய்ய மருத்துவர்களையும் உடன் அழைத்துச் செல்கின்றன. மருத்துவக் குழுக்கள் சிறையாளிகளுக்குத் தனிப்பட்ட கவனத்துடன் நல்ல மருத்துவப் பண்டுவம் கிடைக்கச் செய்வதுடன், அவர்களின் விடுதலைக்குப் பின்னரும் மறுவாழ்வு பெறவும் உதவுகின்றன. அச்சிறையாளிகள் மற்றும் குடும்பத்தினர்க்கு உணவு, உடை மற்றும் பிற உதவிகளுக்காக, துயர்நீக்கப் பொருட்கொடை திரட்டப் பெறுகிறது.

நாடுகளின் நடைமுறை வேறுபாடுகள்:

இவ்வுரிமைப் பாதுகாப்பு இயக்கம் அரசுகளை, அதன் மக்கள் உரிமைப் பதிவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தவோ அல்லது ஒரு 'கருப்புப் பட்டியல்' அணியப்படுத்தவோ முயல்வதில்லை. பல்வேறு நாடுகளில் நடைபெறும் மக்கள் உரிமை மீறல்கள்பற்றிய புலனங்கள் உரிமையாக வெளிவருவதை அங்கு நிலவும் அடக்குமுறையின் வடிவங்களும் அவற்றின் தாக்கங்களும் நாட்டுக்கு நாடு பரவலாக வேறுபடுகின்றன. சில நாடுகளின் அறமன்றங்கள் மனச்சான்று சிறையாளிகளுக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை அளிக்கின்றன; மற்ற நாடுகளில் அச்சிறையாளிகள் உசாவலின்றிப் பல ஆண்டுகள் சிறையிலிடப்படுகின்றனர். சில காவல்நிலையங்களில் மின் அதிர்ச்சி மூலம் உறுப்புச்சிதைவு செய்யப்படுகின்றது. மற்றவை சிலவற்றில் உளவியல் முறையிலான கொடுமைகள் பின்பற்றப்படுகின்றன.

இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதை விடுத்து, இவ் வுரிமைப் பாதுகாப்பு இயக்கம் ஒவ்வொரு வழக்கிலும் நிகழும் மாந்த உரிமை மீறல்களுக்கு முடிவு காண்பதற்கான முயற்சியிலேயே ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது.

இ'து ஒரு நாட்டிற்கு எதிராக உருவாக்கப்படும் பொருளியல் மற்றும் கலைப்பண்புப் புறக்கணிப்பை ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ இல்லை. அனைத்து நாட்டுப் பரிமாற்றங்களின் மூலம் மற்றொரு நாட்டின் படைத்துறை, காவல்துறை, படைக்கருவிகள் மற்றும் சிறப்புநிலை அறிவைப் பெறும் அரசுகள், அவற்றை மனச் சான்றுச் சிறையாளிகளைச் சிறையிடவோ, உறுப்புச் சிதைவு செய்யவோ, சாவுத்தண்டனை நிறைவேற்றவோ, பயன்படுத்தினால், இந்த இயக்கம் அத்தகைய பரிமாற்றங்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறது.

இதன் செயல்பாடு ஒருநாட்டின் உள்முகச்சிக்கல்களில் தலையிடுவது ஆகாதா?

மக்கள் உரிமைப் பாதுகாப்பு என்பது உலகின் அனைத்து நாட்டுப் பொறுப்பு ஆகும். இக் கொள்கையை ஒன்றிய நாடுகள் போன்ற உலகின் முகாமையான அனைத்துலக அமைப்புகள் ஏற்றுக்கொண்கின்றன. இப்பொழுது தங்கள் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி உலக மக்கள் குமுகாயத்திற்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பு அரசுகளுக்கு உள்ளது. ஒரு நாட்டிலுள்ள குடிமக்களின் மக்கள் உரிமைகள் தாக்கப்படும் போது கேள்விகள் எழுப்புவதற்கும் அது குறித்து அக்கறை தெரிவிப்பதற்கும் அனைத்து நாட்டு அமைப்புகளுக்குள்ள உரிமையை ஏற்றுக் கொள்வதும் இப் பொறுப்பில் அடங்கும்.

இவ் வியக்கம் அனைத்துலக மக்கள் குமுகாயம் தெரிவித்துள்ள அனைத்து நாட்டு உரிமை உறுதிப்பாடுகளின் அடிப்படையில் செயல்படுகிறது. இவ்வுறுதிப்பாடுகளை ஓர் அரசு மீறினால் உடன் தாக்கப்பட்டவர்களைக் காக்க இவ்வியக்கம் அங்கு விரைகிறது.

உலக ஒன்றிய நாடுகள் பேரவையின் அனைத்துலக மக்கள் உரிமைக்கொள்கை வெளிப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு 'அம்னஸ்டி' இயக்கம் இயங்குகிறது. ஒன்றிய நாடுகள் அவை (Ecosoc), யுனெஸ்கோ, மற்றும் அமெரிக்க அரசுகளின் அமைப்பு ஆகியவற்றுடன் 'அம்னஸ்டி'க்கு முறையான ஏற்கப்பட்ட உறவுகள் உள்ளன.

அனைத்து நாட்டு மாந்த உரிமைக் கொள்கையறிக்கையின் 30-ஆவது ஆண்டு விழாவின்போது, மக்கள் உரிமைப் பணியில் மிகச் சிறப்பான வெற்றிச் செயல் செய்தமைக்காக "அம்னஸ்டி இண்டர்நேஷன'லுக்கு உலக ஒன்றியப் பேரவை (U.N.O) மாந்த உரிமைப் பரிசு வழங்கப்பட்டது.

தன்னுரிமை, ஞாயம் ஆகியவற்றைப் பெற வழிவகை ஏற்படுத்தியதற்காகவும், அதன் மூலம் உலக அமைதிக்கு அடிகோலியதற்காகவும், 1977-ஆம் ஆண்டு 'அம்னஸ்டி இண்டர் நேஷனல்' ஒப்புரவுக்(சமாதானத்திற்)கான "நோபல்" பரிசைப் பெற்றுள்ளது.

உலகெங்கும் இவ்வியக்கத்தின் முயற்சிகளால் பயன்பெற்றவர்கள் ஏராளமானவர்கள். அவர்களில் சிலர் இவ்வியக்கத்தால் பெற்ற நன்மையை விளக்கியும் பாராட்டியும் இவ்வியக்கச் செயற்பாடுகளைப் புகழ்ந்தும் எழுதியுள்ள இரண்டு கடிதங்கள் வருமாறு:

அரசியல் சிறையாளிகளின் விடுதலைக்கான வேண்டுகோளில் கையெழுத்து இயக்கம் நடத்தியதற்காக இளம் சட்டக்கல்வி மாணவன் ஒருவன் கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் தளைப்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுச் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டான். அதே கிழமையில் அவனுடைய தந்தை இவ்வியக்கத்திற்கு விடுத்த மடல் இது:

"நான் உங்கள் வேண்டுகோள் என்னும் நற்பேற்றை உணர்ந்தேன். ஏனெனில் என் மகனின் சார்பில் நீங்கள் குரல் எழுப்பினீர்கள். 'அம்னஸ்டி இண்டர்நேஷனல்' நம் காலத்திய ஒளியாக உள்ளது. குறிப்பாகச் சிறைக் கதவுகள் மூடப்பட்ட நேரத்தில், விழிகளில் இருள் கவிழ்ந்தவர்களுக்கு இவ்வியக்கம் ஒளியாகத் திகழ்கிறது. உங்கள் தந்நலமற்ற பணியால் இவ்வொளி இத்தகைய தேவையால் விரிவடைந்துவரும் ஒரு வட்டத்திற்குச் சுடரொளியைத் தருகிறது.

இதேபோல் இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தாக்கத்திற்குள்ளானார். அவர் காவலர்களால் உறுப்புச் சிதைவுக் கொடுமைக்கு உள்ளானபொழுது, அவர் கொடுமைப்படுத்தப்பட்ட அறைக்கும் அவர்இல்லத்திற்கும் கொடுக்கப்பட்ட தொலைபேசி இணைப்பின் மூலம், அவருடைய அலறல்களை அவர் மனைவி கேட்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். அவ்வோலங்களைக் கேட்ட அவர் மனைவி அதிர்ச்சியுற்று மாரடைப்பால் இறந்து போனார். அச் சிறையாளி பின்னர் இவ்வியக்கத்தின் முயற்சியால் விடுவிக்கப்பட்டவுடன் அவர் அந்நாட்டை விட்டே வெளியேறி அவ்வியக்கக் குழுவினரைச் சந்தித்துப் பின்வருமாறு கூறினார்.

'அவர்கள் என் மனைவியைக்] கொன்றார்கள். அவர்கள் என்னையும் கொன்றிருப்பார்கள். ஆனால் நீங்கள் தலையிட்டு என் உயிரைக் காப்பாற்றினீர்கள்''.

இவ்வியக்கத்தொடு தொடர்பு கொள்ள :

இவ் வியக்கத்திற்கு உலகெங்கும் ஊக்கமிக்க உறுப்பினர்கள் இலக்கக் கணக்கில் உள்ளனர். 150க்கும் மேற்பட்ட நாடுகளில்

தெரிந்து கொள்ளுங்கள்

ஃ ஒரு மேனிலைப் பள்ளியைத் துவக்க உருபா ஐந்தரை இலக்கம் செலவாகிறது.

—கல்வி அமைச்சர் வீரப்பன் தகவல்; செப்.27;

ஃ அந்தமான் நிக்கோபார் தீவுகளில் வாழும் மக்கள் தொகை இரண்டு இலக்கம். இங்கு ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கினர் தமிழர்கள்.

ஃ கி.மு.2-ஆம் நூற்றாண்டிலேயே சீனாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே கடல் வழி வாணிகம் நடந்துள்ளது.

ஃ ஆங்கிலச் சொல்லாகிய NEWS என்னும் சொல்லுக்குச் செய்தி பொருளாகும். அச் சொல்லில் உள்ள N—North(வடக்கு) என்பதையும், E—East(கிழக்கு) என்பதையும், W—West(மேற்கு) என்பதையும், S—South(தெற்கு)என்பதையும் குறிப்பதாகக் கொண்டு, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் திசைகளிலிருந்தும் வரும் செய்தி என்று பொருள் படுவதாகச் சொல்லுவர்.

ஃ சிலப்பதிகாரம் உ.வே.சாமிநாதரால் 1899-ஆம் ஆண்டுதான் முதன் முதலாக அச்சில் பதிக்கப்பட்டு வெளியிடப் பெற்றது.

ஃ இன்றைய நிலையில் உலகில் ஏறத்தாழ ஐம்பது நாடுகளில் தமிழர்கள் கணிசமாகக் குடியேறியுள்ளனர்.

ஃ இந்திய அரசு தன் வருவாயில் ஓர் உருவாவில் 25 காசைத் தான் வாங்கிய கடனுக்கு வட்டியாகக் கட்டுகிறது.

ஃ இந்தியாவிலிருந்து பட்டுத் துணிகள் அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு 200 கோடி உருவா அளவிலும், செர்மனிக்கு 120 கோடி உருபா அளவிலும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஃ உலகிலேயே சிங்கப்பூரில் உள்ள சாங்கி வானூர்தி நிலையம்தான் மிகச் சிறந்ததும் அழகும் வாய்ந்தது. இரண்டாவதாக இலண்டனில் உள்ள ஹீத்ரோவும் மூன்றாவதாக ஆம்ஸ்டர்டாமின் சிபோல் வானூர்தி நிலையமும் சிறந்தனவாக மதிக்கப் படுகின்றன.

ஃ ஆனந்த பைரவி என்னும் பண்ணில் பாடும் பாடலைக் கேட்டால் குருதி அழுத்தம் குறையும் என்று தமிழக அரசின் இசை ஆராய்ச்சி நடுவம் கண்டுபிடித்துள்ளதாம்.

ஃ சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970-இல் தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டது. எனவே இவ்வாராய்ச்சி நிலையம் அ.தி.மு.க ஆட்சியில் சரிவரக் கவனிக்கப் படுவதில்லை என்று ஒரு குற்றச் சாட்டு உள்ளது.

ஃ 1991 மே 21-இல் திருப்பெரும்புதூரில் தனு என்னும் இலங்கைப் பெண்ணால் குண்டு வெடித்துக் கொலையுண்ட இராசீவைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ் என்னும் நெகிழி(பிளாஸ்டிக்) குண்டு அமெரிக்கப் படைத்துறை-யினரால் கண்டுபிடிக்கப்பட்டது என்னும் செய்தி இக் கொலை வழக்கை உசாவி வரும் வர்மா குழுவால் வெளிப்பட்டுள்ளது. இக் குண்டு $2\frac{1}{2}$ 'கிலோ' எடை கொண்டது. இது 'சி-4 காம்போஷிசன்' என்று அழைக்கின்றது.

ஃ சென்னையில் உள்ள நடுவண்சிறை ஆங்கிலேயர் ஆட்சியில் 1857-இல் கட்டப்பட்டது. இது ஏறத்தாழ 17 குறுக்கம் (ஏக்கர்) நிலத்தில் அமைந்துள்ளது. ஆனால் 1974 சூன் 3-இல்தான் இதற்-குச் சென்னை நடுவண்(மத்திய)சிறை என்று பெயர்வைக்கப்பட்-டது. இதில் ஏறத்தாழ 1500 சிறையாளிகளையே அடைக்கமுடியும் இப்போது சென்னைக்கு அருகில் உள்ள புழல் என்னுமிடத்தில் 100 குறுக்கம்(ஏக்கர்) புதிய சிறை ஒன்று கட்டப்பட்டுள்ளது.

ஃ 100 கோடியை ஆங்கிலத்தில் பில்லியன் என்று கூறு-கிறார்கள்.

ஃ நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பவர்கள் மாதம் உருவா 3500 முதல் 4,600 வரை வருமானமுள்ளவர்கள் ஆவர். இத்தகையவர்கள் இந்தியாவில் ஏறத்தாழ 5.8 கோடி குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 30 கோடி பேர்களாகும்.

ஃ போஃபர்சு ஊழல் என்பது 1400 கோடி உருவா மதிப்பு உள்ள தகரி(பீரங்கி) பேரத்தில் 64 கோடி கையூட்டுப் பெற்ற தாகக் கூறும் குற்றச் சாட்டைக் கொண்டது.

ஃ மாந்தன் தோன்றுவதற்கு ஏறத்தாழ 20 கோடி ஆண்டு-களுக்கு முன்பே எறும்புகள் தோன்றி விட்டன.

ஃ உருது மொழியை அயல் நாட்டு மொழியெனப் பலர் நினைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் அ'து இந்திய நாட்டு மொழிகளில் ஒன்றுதான். அம் மொழியின் தாய் நிலம் உத்திரப் பிரதேசம். அங்கு உருதைத் தாய்மொழியாகக் கொண்டவர் எண்ணிக்கை 1 கோடியே 7 இலக்கத்து 67 ஆயிரத்து 175 பேர்.

ஃ இந்தியாவில் ஆண்டுக்கு 70,000 பேர் தற்கொலை செய்து கொண்டு இறந்து போகின்றனராம். ஆனால் அதற்கு முயற்சி செய்பவர்கள் 5 இலக்கம் பேர்களாம்.

ஃ நாம் குழம்புக்குப் பயன்படுத்தும் கிராம்பு (clove) முதன் முதல் இந்தோனேசியாவிலிருந்து உலகம் முழுவதும் கொண்டு செல்லப் பெற்றது.

ஃ உலகிலேயே பிலிப்பைன்சு நாட்டில் தான் தேங்காய் மிகுதியாக விளைகிறது.

ஃ நமது உடலில் சுரக்கும் 24 வகையான கார வேதி நீர்மனில் 13 வகையான வேதிநீர்கள் வெற்றிலையில் உள்ளனவாம்; இவை நோய்த்தடுப்பு ஆற்றல் உள்ளனவாம்; இதுவன்றி அவை செரிமான ஆற்றலும் கொண்டவையாம்;குருதி வளத்தை மேம்படுத்தும்; சுண்ணும்பு எலும்புகளுக்கு வலிவூட்டும்; பாக்கின் துவர்ப்பு குடலில் பூச்சிகளைச் சேரவிடுவதில்லையாம்;

ஃ தஞ்சாவூர் பெரிய கோவில் கி;பி1003 முதல் 1010 வரை ஏழு ஆண்டுகள் கட்டப்பட்டது;

ஃ இந்தியாவில் மொத்தம் 1,45;000 அஞ்சல்அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றனவாம்,

ஃ சென்னை நகரில் உள்ள மிதிவண்டிகள் 10 இலக்கத்திற்கு மேல்; தானி(ஆட்டோ)க்கள் 14,328;இரண்டு சக்கர ஊர்திகள் 4,35, 114.பிற மகிழுந்துகள் பேருந்துகள், சரக்குந்துகள் அனைத்தும் சேர்ந்து 154048 ஆகும்; இது 1991 கணக்கு;

ஃ பகலுணவுக்குப்பின் குறைந்தது 20 நிமையம் அளவு ஒரு சிறு தூக்கம் போடுவது சுறுசுறுப்பாக செயல் படவும்,ஊக்கமாக இருப்பதற்கும் உதவுகிறது என்று பிரிட்டிக தூக்கம் பற்றிய ஆராய்ச்சியறிஞர் சேம்சு ஆர்ன் மாந்தரின் மனநிலை உடல்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளனர்;

ஃ 1991-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்திருந்த சுற்றுலாப் போக்கர்(பயணி)கள் 16,77 461 பேர்கள் என்றும், அவர்கள் வழி 2918 கோடி வெளிச் செலாவாணி வருமானம் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஃ 62 அகவையுடைய பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத், தம் அணுக்கச் செயலர்களில் ஒருவரான 28 அகவையுடைய சுகா டவில் என்னும் கிறித்துவப்பெண்ணை 1992 பிப்ரவரியில் மணந்து கொண்டார்; யாசர் அராபத் கல்வித் தகுதியில் ஒரு பொறியியல் வல்லுநர் ஆவார்;

ஃ தமிழகத்தில் மொத்தம் 5000 மதுக்கடைகளை நடத்த தமிழக அரசு உரிமம் வழங்கி உள்ளது;

ஃ பிரான்சு நாட்டின் தென்பகுதியில் cap—d—Agde, என்றொரு சுற்றுலா நடுவம் உள்ளது; இங்கு வரும் சுற்றுலாப் போக்கர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாரும் ஆடைகளே அணிவதில்லை; ஒவ்வொரு கிழமையும்(வாரமும்) ஏறத்தாழ 35,000 பேர் இங்கு வருகின்றனர், இதே போலச் சுற்றுலா நடுவங்கள் செர்மனி, யூகோசுலாவியா முதலிய நாடுகளிலும் இருக்கின்றன;

முத்து மொழிகள்!

ஃ சிந்தனை மாந்தனை இளமையுடையவனாக ஆக்குகிறது; வலிவுள்ளவனாக ஆக்குகிறது; அதுவே வாழ்வின் செழிப்பான உணர்வு. —மார்க்சிம் கார்க்கி

ஃ உலக ஆற்றல்கள் எல்லாவற்றிலும் சிறந்த பேராற்றல் சிந்தனைதான். —இசுடாலின்

ஃ ஒழுக்கம் என்பது தனக்கும் பிறர்க்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளும் ஒரு நடைமுறை. —தந்தை பெரியார்

ஃ வீரம் என்பது ஞாயமான பணியில் தளராத உறுதியுடன் இருப்பது. —புளூடார்ச்சு

ஃ மாந்த வாழ்க்கை என்பதே மக்களினத்திற்குத் தொண்டு செய்வதுதான். தொண்டு செய்யாத வாழ்க்கை விலங்கு வாழ்க்கைக்குச் சமமானதுதான். —தந்தை பெரியார்

ஃ அதிகார வெறி, பதவி ஆசை என்பது ஒரு கொடுமையான தொற்று நோய். அது யார் யாரை அண்டுகிறதோ, அவர்களை யெல்லாம் கெடுத்து விடுகிறது.— —செல்லி

ஃ மேலே உயர உயரப் போக வேண்டுமென்றால் உங்கள் சொந்தக் கால்களையே பயன்படுத்துங்கள்; உங்களை யாரும் தூக்கிச் செல்ல இசையாதீர்கள். மற்றவர்களின் தலைகள் மீதோ, முதுகுகள் மீதோ உட்கார்ந்து முன்னேற நினைத்து விடாதீர்கள். இவ்வுலகின் மாந்த இனம் பெற்றுள்ள உரிமைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பெருமைக்குரிய செயல் வலிமையின் மூலம் பெறப் பெற்ற உரிமையே. —நியேட்சே

ஃ நமது குறிக்கோள், தனி உடைமைக்கு மாற்று காண்பதன்று; அத் தனியுடைமைக் கோட்பாட்டை அழிப்பதே ஆகும். வகுப்பு வேறுபாடுகளைச் சமநிலைப் படுத்துவது அன்று; அவ்வேறுபாடுகளையே அகற்றுவதாகும். இன்றுள்ள குமுகாய அமைப்பில் ஒரு முன்னேற்றத்தை உண்டாக்குவதன்று; அதற்குப் பகரமாகப் புதியதொரு குமுகாயத்தை நிலை நிறுத்துவதே ஆகும். —மார்க்சு எங்கல்சு

ஃ நாம் யாரையும் அடக்கி ஆள விரும்பவில்லை; அதே சமயத்தில் நம்மையும் யாரும் அடக்கி ஆளவும் விட மாட்டோம். —சன்யாட்சன்

ஃ கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் உறுதியான உள்ளம் இல்லையென்றால், கடமையை நிறைவேற்ற முடியாது. —அறிஞர் அண்ணா

ஃ தன் கடமை எதுவென்று உணர்ந்தவன் அறிவாளி; அக் கடமையை எப்படிச் செய்யவேண்டும் என்று உணர்ந்தவன் திறமைசாலி. —சோர்தான்

∴ சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடும் குமுகாயச் சீர்திருத்தக்காரனே அரசியல்காரனைவிட மிகுந்த துணிவுள்ளவன்.

—பீமராவ் அம்பேத்கார்

∴ பொறுப்பான மக்கள் உள்ள நாட்டில்தான் பொறுப்பான ஆட்சியையும் எதிர்பார்க்க முடியும். —பிளேட்டோ

∴ மனவலிமையற்றவன் சூழ்நிலைக்கு அடிமையாகிறான். மனவலிவு உள்ளவன் சூழ்நிலையை எதிர்த்துப் போராடுகிறான். அறிவும் மனவலிவும் உள்ளவனே சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுகிறான்.

—டெசின்

∴ வாழ்க்கையில் துய்ப்பு நலன்கள் அதிகரிக்க அதிகரிக்க கலைகள் முழுமை அடைய அடைய, ஆடம்பரம் பெருகப் பெருக, உண்மையான வீரம் தேய்ந்து போகிறது. ஒழுக்கங்களோ அறவே மறைந்து போகின்றன.

—உரும்சா

∴ கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் மூன்றிலும் மிக முகாமையானது கட்டுப்பாடுதான். கட்டுப்பாடு உறுதியாக இருந்துவிட்டால் மற்றைய இரண்டும் தானே அமைந்துவிடும்.

—தந்தை பெரியார்

புற்று நோய்!

∴ புற்று நோயில் கிட்டத்தட்ட 200 வகைகள் உள்ளன. தோல், குடல்களின் உள்பரப்பு ஆகிய இடங்களில் வரும் புற்று நோய்கள் கார்சினோமா (Carcinoma) எனப்படும். இணைப்புத் திசுக்களில் வரும் புற்றுநோய் சர்க்கோமா (Sarcoma) எனப்படும். கல்லீரலில் வருவது ஹெபடோமா (Hepatoma). சுரப்பிகளில் வருவது அடினோமா (Adenoma). அரத்தின் உள்ள வெள்ளணுக்களைத் தாக்குவது லியுகேமியா (Leukemia). இப்படி, தாக்குகிற இடத்தைப் பொறுத்துப் புற்று நோயின் பெயர்கள் அமையும். இந்நோய் நண்டின் வளைந்த கிடுக்கிகளைப் போல் நகர்ந்து சேதப் படுத்துவதால், இதற்கு நண்டு என்று பொருள்படுகிற cancer என்னும் இலத்தின் மொழிச் சொல்லைப் பெயராக வைத்தனர்.

∴ தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகள் புட்டிப்பால் குடித்து வளரும் குழந்தைகளை விட அறிவுக் கூர்மையில் சிறந்து விளங்குவதாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நடந்த ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. புட்டிப்பால் குழந்தைகளை விட, தாய்ப்பால் குழந்தைகள் அறிவுத் திறனில் 10 விழுக்காடு சிறந்து விளங்குகின்றனவாம்.

∴ பிலிப்பைன்சு நாடு 7000 தீவுகள் அடங்கியது. அங்கு குமுறும் எரிமலைகளும் உண்டு. ஏறத்தாழ 5.44 கோடி மக்கள் அங்கு வாழ்கின்றனர்.

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

30. கேபன்— (GABON)—குடியரசு

நிலப்பரப்பு : 2.67,667 ச.அ.மா
மக்.தொ : 1.3,70,000
மக்.தொ.பெ : 1.0%
மக்.வா.எ : ஆண்: 42, பெண்: 45(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 65%
தலைநகர் : லிப்ரவில்லே
மொழி : பிரெஞ்சு, பாண்டு திசைமொழிகள்
நாணயம் : CAF பிராங்க்—100 சென்டிம்கள்.

31. காங்கோ— (CONGO)—குடியரசு

நிலப்பரப்பு : 3,42,000 ச.அ.மா
மக்.தொ : 1,7,40,000
மக்.தொ.பெ : 2. 6%
மக்.வா.எ : ஆண்: 44. பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 80%
தலைநகர் : பிரேசாவில்லே
மொழி : பிரெஞ்சு, பாண்டுதிசைமொழிகள் (dialects)
நாணயம் : CFA-பிராங்க்—100 சென்டிம்கள்

32. உகாண்டா— (UGANDA)—குடியரசு

நிலப்பரப்பு : 2,3,6,860 ச.அ.மா.
மக்.தொ : 1,40,00,000
மக்.தொ.பெ : 3.0%
மக்.வா.எ : ஆண்: 51, பெண்: 54(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 25%
தலைநகர் : கம்பாலா,
மொழி : ஆங்கிலம், சுவாயில்லி, மலைவாழ் மக்கள் மொழிகள்
நாணயம் : உகாண்டா ஷில்லிங்—100சென்ட்கள்

33. இர்வாண்டா— (RWANDA)—குடியரசு

நிலப்பரப்பு : 2,6,338 ச.அ.மா
மக்.தொ : 5,6,50 000
மக்.தொ.பெ : 3.0%
மக்.வா.எ : ஆண்: 44, பெண்: 48 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 37%
தலைநகர் : கிகாலி
மொழி : பிரெஞ்சு, சுவாயிலி.
நாணயம் : இர்வாண்டா பிராங்க்—100 சென்டிம்கள்.

84. புருண்டி— (BURUNDI)—குடியரசு

நிலப்பரப்பு : 27834 ச.அ.மா.
மக்.தொ : 45,60,000
மக்.தொ.பெ : 2.2%
மக்.வா.எ : ஆண்: 39. பெண்: 43(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 25%
தலைநகர் : புஜம்புரா
மொழி : பிரெஞ்சு, கிருண்டி
நாணயம் : புருண்டி பிராங்க்—100 சென்டிம்கள்

35. கென்யா— (KENYA)—குடியரசு

நிலப்பரப்பு : 582 646 ச.அ.மா
மக்.தொ : 19,50,000
மக்.தொ.பெ : 4.0%
மக்.வா.எ : ஆண்: 51, பெண்: 56 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 40.%
தலைநகர் : நைய்ரோபி
மொழி : ஆங்கிலம், சுவாயிலி
நாணயம் : கென்யா ஷில்லிங்—100சென்ட்கள்

36. சோமாலியா— (SOMALIA)—குடியரசு

நிலப்பரப்பு : 637 657 ச.அ.மா
மக்.தொ : 38 60 000
மக்.தொ.பெ : 7, 9%
மக்.வா.எ : ஆண்: 41, பெண்: 45(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 5%
தலைநகர் : முக்டிஷோ
மொழி : சோமாலி
நாணயம் : சோமாலி ஷில்லிங்—100சென்டிசிமி

37. சைய்ரி— (ZAIRE)—குடியரசு.

நிலப்பரப்பு : 2344 885 ச.அ.மா
மக்.தொ : 3,19,40,000
மக்.தொ.பெ : 2.8%
மக்.வா.எ : ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு : ஆண் 40% பெண்: 15%
தலைநகர் : கின்ஷாசா
மொழி : பிரெஞ்சு, மாண்டு, திசைமொழிகள்
நாணயம் : சைய்ரி—100 மகுடா

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழு இலக்கத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இப்பணியில் தங்களை ஈகப்படுத்திக் கொண்டுள்ளனர் 'அம்னஸ்டியின்' குறிக்கோளை ஆதரிக்கும் எவரையும் இவ்வியக்கம் வரவேற்கிறது. வாழ்க்கையின் பல வேறுபட்ட நிலைகளிலிருந்து வரும் பலவகைப்பட்ட சிந்தனையோட்டங்களைக் கொண்ட இதன் உறுப்பினர்கள் இதன் பலவகையான நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க ஊக்கம் அளிக்கப் படுகிறார்கள். உறுப்பினர்கள் ஆங்காங்குச் சிறுசிறு குழுக்களாக இணைந்து பணியாற்றுகின்றனர். தற்போது ஆப்பிரிக்கா, ஆசியா, ஆசுத்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் நடுகிழக்கு நாடுகள் ஆகியவற்றில் ஏறத்தாழ 4150 குழுக்கள் உள்ளன.

ஒவ்வொரு நாட்டிலுள்ள குழுவும் தனது நாடு அல்லாத பிற நாடுகளில் சிறையிடப்படும் சிறையாளிகளின் சார்பாகச் செயல்படுகிறது. இது விருப்புவெறுப்பற்ற நடுநிலையான செயல்பாட்டிற்கு வழி செய்வதுடன், மாந்தநேயம் தேச எல்லைகளைக் கடந்த ஒன்று என்ற 'அம்னஸ்டி'யின் கொள்கையையும் உறுதி செய்கிறது. ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த இரண்டு சிறையாளிகளின் வழக்கை எடுத்துக்கொண்டு, அவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து அவர்கள் தொடர்பான அரசுக்குக் கடிதம் எழுதுகிறது; வேறு பல நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது.

எந்தக் குழுவோ அல்லது உறுப்பினரோ, தனது நாட்டைக் குறித்து இயக்கத்திற்குச் செய்திகள் அளிக்கும்படி எதிர்பார்க்கப் படுவதில்லை. அதுபோலவே, அவர்களது நாட்டில் நடக்கும் மாந்த உரிமை மீறல்கள் குறித்து, அனைத்துலக இயக்கம் விடுக்கும் அறிக்கைகளுக்கோ, அதன் செயல்பாட்டிற்கோ, அவர்களை எவ்வகையிலும் பொறுப்பாக்குவதில்லை.

'அம்னஸ்டி இண்டர்நேஷனல்' குடியரசு முறையில் நடத்தப் பெறுகிறது. 60க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள உறுப்பினர்கள், அந்தந்த நாட்டின், நாட்டுப் பிரிவின் அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட படிநிகராளிகள் அடங்கிய அனைத்து நாட்டுக் குழு முகாமையான கொள்கைகள் குறித்த முடிவுகளை எடுக்கிறது. அவர்கள் எடுத்த முடிவுகளை முறைப்படுத்தவும், தலைமைச் செயலகத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் ஒரு அனைத்துலக ஆட்சிக்குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது.

எங்கும் உள்ள எவரும் இவ்வியக்கத்தின் தலைமைக் குழுவுடனோ, அந்நாட்டு உள்ளூர்க் குழுவிடமோ தொடர்பு கொள்ளுவதன் வழி அப் பேரியக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

(அடிப்படை: இயக்கத்தின் இலண்டன் தலைமைக் குழுவில் வெளியீடு.)

○ உங்களில் சிலர் என்னை முழுவதும் நம்பவில்லை. உங்கள் மனம் வேறு எதையோ நாடியிருக்கின்றது; என்னிடத்தில் இவ்வுலக வாழ்வுக்குரியனவற்றை எதிர்பார்க்காதீர்கள்; நான் இவ்வுலகத்துக்கு உரியவனல்லன்; புலம்பன் வாழ்க்கையே மெய் வாழ்க்கை; அதுவே உயிரூட்டுகின்றது; பருவுடல் வாழ்க்கை எதற்குப் பயன்படும்? நான் உங்கட்குக் கூறுபவையெல்லாம் மெய்யுணர்வைப் பொறுத்தவை; அவையே உங்கட்கு உயிர்நிலை;

○ உலகம் உங்களைப் பகைக்கின்றது என்று அஞ்சாதீர்கள்; உலகம் உங்களைப் பகைக்கு முன்பு என்னைப் பகைக்கின்றது; நான் உலகின் செயல்கள் தீயவை என்று கூறுகின்றேன்; ஆகவே உலகம் என்னைப் பகைக்கின்றது; நீங்கள் உலகத்தவராக இருந்தால் உலகம் உங்கள்பால் நட்புக்காட்டியிருக்கும், நீங்கள் உலகத்தவராயில்லை; நான் உங்களை அவர்களினின்று பிரித்தெடுத்தேன்; ஆகவே உலகம் உங்களையும் பகைக்கின்றது; அதற்காக அஞ்சுதல் வேண்டா; நீங்கள் அழுது புலம்பினுல் உலகம் மகிழக்கூடும்; ஆயினும் ஒருநாள் நீங்கள் மகிழ்வடைவீர்கள்; பிள்ளைப்பேற்றுக் காலத்தில் பெண் பெருந்துன்பம் அடைகின்ருள். ஆயினும் பிள்ளை பிறந்தபின் அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி? அதுபோல் உங்கள் குறிக்கோளை நீங்கள் எய்தியபின் உண்மையாகவே பெருமகிழ்வெய்துவீர்கள்;

—ஏசுகிறித்து, 'பைபிள்' நூலிலிருந்து;

உயிரின் தன்மை.

உயிரிகளின் தனிச் சிறப்பியல்கள் இவை என்று அறிவியலாளர் வரையறுக்கின்றனர்:

1) உயிரிகளில் DNA PNA, எனப்படும் நியூக்ளிக் அமில(புளிய)ங்கள், அமினே அமிலங்கள், புரோட்டான்கள் இருத்தல் வேண்டும்; இவை உயிர்களுக்கு மூலக் கூறுகள். இம் மூலக் கூறுகளின் அடிப்படை மூலகங்களாவன: கரிமம் (cabon), நீர்வளி (Hydrogen), உயிர்வளி (Oxygen)

2) உறுப்பசைவுகள், நகர்தல் போன்ற செயல்கள் இருத்தல் வேண்டும்.

3) இனப் பெருக்கம் செய்தல் வேண்டும்; அஃதாவது எண்ணிக்கையை அதிகபடுத்துதல்;

4) திடீர் மாற்றம் (Mutation); அஃதாவது ஒருவகை உயிரிலிருந்து மற்றெரு வகை உயிரி தோன்றுவது.

5) வளர்சிதை மாற்றம் (Metabolism) அஃதாவது உணவை ஏற்று, ஆற்றலைப் பெற்று, கழிவை வெளியேற்றுவது; அஃதாவது வளர்ச்சியும் சிதைவும் தொடர்ந்து நடைபெற வேண்டும்;

6) உயிரின் மேற்கண்ட மாற்றங்களினுல் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றம், அஃதாவது வேதியல் தன்மை, இயக்கம், ஒளியின் தன்மை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம்;

திருவள்ளுவர் ஆண்டு 2025 தமிழ் நாள்காட்டி ஆங்கில ஆண்டு 1994

பெரிய எண் தமிழ் நாள்; சிறிய எண் ஆங்கில நாள்

கிழமை	சுறவம் (தை) சனவரி - பிப்ரவரி					கும்பம் (மாசி) பிப்ரவரி - மார்ச்சு					கடகம் (ஆடி) சூலை - ஆகஃச்டு					மடங்கல் (ஆவணி) ஆகஃச்டு - செப்டம்பர்				
ஞாயிறு		3 16	10 23	17 30	24 6	1 13	8 20	15 27	22 6	29 13	1 17	8 24	15 31	22 7	29 14		5 21	12 28	19 4	26 11
திங்கள்		4 17	11 24	18 31	25 7	2 14	9 21	16 28	23 7		2 18	9 25	16 1	23 8	30 15		6 22	13 29	20 5	27 12
செவ்வாய்		5 18	12 25	19 1	26 8	3 15	10 22	17 1	24 8		3 19	10 26	17 2	24 9	31 16		7 23	14 30	21 6	28 13
அறிவன்		6 19	13 26	20 2	27 9	4 16	11 23	18 2	25 9		4 20	11 27	18 3	25 10		1 17	8 24	15 31	22 7	29 14
வியாழன்		7 20	14 27	21 3	28 10	5 17	12 24	19 3	26 10		5 21	12 28	19 4	26 11		2 18	9 25	16 1	23 8	30 15
வெள்ளி	1 14	8 21	15 28	22 4	29 11	6 18	13 25	20 4	27 11		6 22	13 29	20 5	27 12		3 19	10 26	17 2	24 9	31 16
காரி	2 15	9 22	16 29	23 5	30 12	7 19	14 26	21 5	28 12		7 23	14 30	21 6	28 13		4 20	11 27	18 3	25 10	

கிழமை	மீனம் (பங்குனி) மார்ச்சு - ஏப்ரல்					மேழம் (சித்திரை) ஏப்ரல் - மே					கன்னி (புரட்டாசி) செப்டம்பர் - அக்டோபர்					துலாம் (ஐப்பசி) அக்டோபர் - நவம்பர்				
ஞாயிறு		7 20	14 27	21 3	28 10		4 17	11 24	18 1	25 8	30 16	2 18	9 25	16 2	23 9		6 23	13 30	20 6	27 13
திங்கள்	1 14	8 21	15 28	22 4	29 11		5 18	12 25	19 2	26 9	31 17	3 19	10 26	17 3	24 10		7 24	14 31	21 7	28 14
செவ்வாய்	2 15	9 22	16 29	23 5	30 12		6 19	13 26	20 3	27 10		4 20	11 27	18 4	25 11	1 18	8 25	15 1	22 8	29 15
அறிவன்	3 16	10 23	17 30	24 6	31 13		7 20	14 27	21 4	28 11		5 21	12 28	19 5	26 12	2 19	9 26	16 2	23 9	30 16
வியாழன்	4 17	11 24	18 31	25 7		1 14	8 21	15 28	22 5	29 12		6 22	13 29	20 6	27 13	3 20	10 27	17 3	24 10	
வெள்ளி	5 18	12 25	19 1	26 8		2 15	9 22	16 29	23 6	30 13		7 23	14 30	21 7	28 14	4 21	11 28	18 4	25 11	
காரி	6 19	13 26	20 2	27 9		3 16	10 23	17 30	24 7	31 14	1 17	8 24	15 1	22 8	29 15	5 22	12 29	19 5	26 12	

கிழமை	விடை (வைகாசி) மே - சூன்					ஆடவை (ஆனி) சூன் - சூலை					நளி (கார்த்திகை) நவம்பர் - திசம்பர்					சிலை (மார்கழி) திசம்பர் - சனவரி				
ஞாயிறு	1 15	8 22	15 29	22 5	29 12		5 19	12 26	19 3	26 10		4 20	11 27	18 4	25 11		3 18	10 25	17 1	24 8
திங்கள்	2 16	9 23	16 30	23 6	30 13		6 20	13 27	20 4	27 11		5 21	12 28	19 5	26 12		4 19	11 26	18 2	25 9
செவ்வாய்	3 17	10 24	17 31	24 7	31 14		7 21	14 28	21 5	28 12		6 22	13 29	20 6	27 13		5 20	12 27	19 3	26 10
அறிவன்	4 18	11 25	18 1	25 8		1 15	8 22	15 29	22 6	29 13		7 23	14 30	21 7	28 14		6 21	13 28	20 4	27 11
வியாழன்	5 19	12 26	19 2	26 9		2 16	9 23	16 30	23 7	30 14	1 17	8 24	15 1	22 8	29 15		7 22	14 29	21 5	28 12
வெள்ளி	6 20	13 27	20 3	27 10		3 17	10 24	17 1	24 8	31 15	2 18	9 25	16 2	23 9		1 16	8 23	15 30	22 6	29 13
காரி	7 21	14 28	21 4	28 11		4 18	11 25	18 2	25 9	32 16	3 19	10 26	17 3	24 10		2 17	9 24	16 31	23 7	

அறிவன் - புதன். காரி - சனி

அச்சமைப்பு: மாணவர் நகலகம், அடையாறு, சென்னை-20. பேசி: 411358

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்.
• திருக்குறள்

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)